# மாதிரி அரையாண்டுத் தேர்வு–2023–24

தேர்வு எண் | | | | | | |

வகுப்பு :11

## பொருளியல்

காலம் :3.00

மதிப்பெண்கள்:90

### Part – I

I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. பற்றாக்குறை இலக்கணத்தின் ஆசிரியர் யார்?
அ) ஆடம்ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை பிரச்சனை
அ) பற்றாக்குறை ஆ) எண்ணற்ற விருப்பங்கள் இ) வறுமை ஈ) வேலையின்மை

3. கீழ்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாக கொண்டுள்ளது அ) குறைந்து செல் விளைவு விதி
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை

4. முதன்மை உற்பத்தி காரணிகள் அ) நிலம் மற்றும் அமைப்பு ஆ) உழைப்பு மற்றும் அமைப்பு
இ) நிலம் மற்றும் உழைப்பு ஈ) மூலதனம் மற்றும் நிலம்

5. ஓர் அலகு உற்பத்தி காரணியை அதிகரிக்கும்போது கிடைக்கும் உற்பத்தி ……………..
அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி இ) சராசரி உற்பத்தி ஈ) இவை அனைத்தும்

6. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான செலவு என்பது
அ) உள்ளுறு செலவு ஆ) வெளியுறு செலவு இ) பொருளாதார செலவு ஈ) இவை அனைத்தும்

7. நிறைவுப் போட்டி அனுமானிப்பது ……….. அ) ஆடம்பர பண்டம் ஆ) வேறுபடுத்தப்பட்ட பண்டம்
இ) ஒத்த தன்மையுடைய பண்டம் ஈ) இவை அனைத்தும்

8. விலைத் தலைமை அம்சம் கொண்ட அங்காடி
அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமை இ) சில்லோர் முற்றுரிமை ஈ) முற்றுரிமைப்போட்டி

9. போலி வாரம் இதனால் தோன்றுகின்றது அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள்
ஆ) நிலத்தின் செழுமை வேறுபாடு இ) நிலத்தின் அமைப்பு ஈ) இவை அனைத்தும்

10. எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்.
அ) வாக்கர் ஆ) சீனியர் இ) மார்ஷல் ஈ) கீன்ஸ்

11. ஜனநாயக சமதர்மத்தை கொண்டுவந்தவர்.
அ) ஜவகர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) காரல் மார்க்ஸ் ஈ) மகலநோபிஸ்

12. ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது அ) குழந்தை இறப்பு வீதம்
ஆ) மகப்பேறு இறப்பு வீதம் இ) இளைஞர் இறப்பு வீதம் ஈ) கச்சா இறப்பு வீதம்

13. பத்தாம் ஐந்தாண்டு திட்ட காலம்
அ) 1992–1997 ஆ) 2002–2007 இ) 2002–2017 ஈ) 2007–2012

14. வாழ்க்கைத்தர குறியீட்டெண்ணை உருவாக்கியவர்
அ) பிஸ்வாஜித் ஆ) நேரு இ) டி.மோரிஸ் ஈ) சென்

15. இந்தியாவில் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம்……ல் ஏற்படுத்தப்பட்டது
அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சின்

16. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ஒரு ……..ஆகும்
அ) ஆலொசனைக் குழு ஆ) சட்டப்்பூ+ா;வமான குழு இ) அ மற்றும் ஆ ஈ) எதுவும் இல்லை

17. பொருளியலில் கணிதத்தை முதன் முதலாக பயன்படுத்தியவர்
அ) ஜியோவானி செவா ஆ) பிஷர் இ) சர் வில்லியம் பெட்டி ஈ) ஆடம்ஸ்மித்

18. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை…….
அ) மகலநோபிஸ் ஆ) M.S.விஸ்வநாதன் இ) M.S.சுவாமிநாதன் ஈ) M.S.அரங்கநாதன்

19. பொருந்தா ஒன்றை கண்டறிக
அ) மாகான அங்காடி ஆ) தேசிய அங்காடி இ) பன்னாட்டு அங்காடி ஈ) நீண்ட கால அங்காடி

20. பொருந்தும் இணையை கண்டறிந்து எழுதுக
அ) TVC/Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
ஆ) TFC/Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
இ) TVC+Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
ஈ) TVC-Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30–க்கு கட்டாயம் விடையளி** 7X2=14

21. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
22. தேவை விரிவு மற்றும் தேவை சுருக்கத்தை வேறுபடுத்துக.
23. அளிப்புக் கோடு மேல் நோக்கி செல்லக் காரணம் யாது ?
24. அங்காடி வரையறு.
25. பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக.
26. பசுமைப் புரட்சியின் பலவீனங்களை பட்டியலிடுக.
27. சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் யாது ?
28. ஊரக பொருளாதாரம் வரையறு.
29. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன ?
30. MS word ன் முக்கிய அம்சங்கள் யாவை ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளி** 7X3=21

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை ?
32. மனித விருப்பங்களின் இயல்பை விவரி.
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
34. இறுதிநிலை வருவாய் குறிப்பு வரைக.
35. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை சுருக்கமாக விளக்குக.
36. நலப் பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை கூறுக.
37. PQLI என்றால் என்ன ?
38. உலகமயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குக.
39. ஒரு நிறுவனத்தின் மொத்த செலவுச் சார்பு TC= $5+x^2$ ஆகும். $x=10$ என்ற அளவில் மொத்தச் செலவினைக் காண்க.
40. தமிழ்நாட்டின் கனிம வளங்கள் பற்றி குறிப்பு வரைக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41.அ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.
(அல்லது)
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.

42.அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்கள் விவரி
(அல்லது)
ஆ) மொத்தச் செலவு (TC)= 10+Q3, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.

43.அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக. (அல்லது)
ஆ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

44.அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக. (அல்லது)
ஆ) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க ?

45. அ) 2015–2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி–இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக. (அல்லது)
ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி.

46. அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. (அல்லது)
ஆ) ஊரக வறுமைக்கான காரணங்களை விளக்குக.

47. அ) தமிழ்நாட்டின் பல்வேறு ஆற்றல் வளங்களை விவரி. (அல்லது)
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?

**A.Alexis, PGTeacher (Economics) Don Bosco Hr.Sec.School.Varadarajanpet. Ariyalur Dt. Cell: 9543776128**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com